## ஆதம்பாக்கம் MRTS நிலையப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்!

# ரயில்வே பணியாளர்களின் நீண்டகால கோரிக்கைகளை நிறைவேற்றித் தருக!

### ஒன்றிய இரயில்வே அமைச்சரைச் சந்தித்து தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. கோரிக்கை!

புதுடெல்லி, ஜூலை 28-

தென் சென்னை மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களை நேரில் சந்தித்து, தென் சென்னை மக்களின் நீண்டகால கோரிக்கையாக உள்ள சென்னை கடற்கரை - செயின்ட் தாமஸ் மவுண்ட் எம்.ஆர்.டி.எஸ். நீட்டிப்புத் திட்டத்தின் நிலுவைப் பணிகளை விரைந்து நிறைவேற்ற வலியுறுத்தி மனு அளித்தார்.



குறிப்பாக, தென் சென்னை மக்களவைத் தொகுதிக்குட்பட்ட ஆதம்பாக்கம் எம்.ஆர்.டி.எஸ். நிலையத்தில் நடைமேடை சீரமைப்புப் பணிகளை விரைந்து முடித்து, ரயில்கள் அதிகாரப்பூர்வமாக நிற்கும் வசதியை உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்றும், பாதுகாப்பு நடைமுறைகள் நிறைவடைந்த பிறகு வேகக் கட்டுப்பாடுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும், புழுதிவாக்கம் எம்.ஆர்.டி.எஸ். நிலையத்தில் எஸ்கலேட்டர்கள் உள்ளிட்ட பயணிகள் வசதிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தென் சென்னை பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் தினமும் பயன்படுத்தி வரும் இந்த முக்கிய புறநகர் ரயில் வழித்தடத்தின் முழுமையான பயன் பொதுமக்களுக்கு விரைவில் கிடைக்க, எஞ்சியுள்ள அனைத்து பணிகளையும் துரிதப்படுத்துமாறு ஒன்றிய ரயில்வே அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

அதே சந்திப்பில், இந்திய ரயில்வேயின் பாதுகாப்பு அமைப்பில் முக்கியப் பங்காற்றி வரும் ரயில்வே சிக்னல் மற்றும் தொலைத்தொடர்பு (Signal & Telecommunication - S&T) பணியாளர்களின் நீண்டகால கோரிக்கைகள் குறித்தும் தனி மனு அளித்தார்.

அந்த மனுவில், 8 மணி நேர பணி நேர முறையை அமல்படுத்துதல், S&T தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு ஊதிய சமத்துவத்தை மீட்டெடுத்தல், பாதுகாப்பு பிரிவு பணிகளில் அவுட்சோர்சிங் முறையைத் தடை செய்தல், மற்றும் காலியாக உள்ள பணியிடங்களை உடனடியாக நிரப்ப ஆட்சேர்ப்பை விரைவுபடுத்துதல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தார்.

நாட்டின் ரயில்வே பாதுகாப்பை உறுதி செய்யும் இப்பணியாளர்களின் நலனையும், பயணிகளின் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு, அவர்களின் நீண்டகால கோரிக்கைகளுக்கு விரைந்து தீர்வு காணுமாறு ஒன்றிய ரயில்வே அமைச்சரிடம் டாக்டர் தமிழச்சி தங்கபாண்டியன் கேட்டுக்கொண்டார்.

## சிறு குறு விவசாயிகளின் உற்பத்தித் திறனைப் பெருக்கிட வேண்டும்!

# விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க ஒன்றிய அரசு முன் வருமா?

### மாநிலங்களவையில் எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 28-

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் அவர்கள் 24.-07.-26 அன்று மாநிலங்களவையில் சிறு குறு விவசாயிகளின், விவசாய உற்பத்தி திறனை பெருக்கிடவும், விவசாயிகளின் ஆண்டு வருமானம் வளர்ச்சியடையவும், ஏதேனும் முயற்சிகளை ஒன்றிய அரசு மேற்கொண்டு உள்ளதா? என்றும், அவர்களுக்கு கடன் உதவி அதிக அளவில் கிடைக்கவும், விவசாயப் பொருட்களின் சந்தை வாய்ப்பை அதிகரிக்கவும், ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா? என்றும் ஒன்றிய அரசின் விவசாயத் துறை இணையமைச்சர் ராம்நாத் தாகூர் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.



ஒன்றிய அரசின் விவசாயத் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:-

விவசாயம் மாநில அரசின் பட்டியலில் இருப்பதால், கொள்கை முடிவுகள் மூலமே ஒன்றிய அரசு மாநிலங்களுக்கு துணை செய்ய இயலும் என்றும், பல்வேறு ஒன்றிய அரசின் திட்டங்கள், அதிக பட்ச விலை நிர்ணயம், கடன் உதவி திட்டங்கள், சந்தை வாய்ப்புகளை அதிகப்படுத்துதல், போன்ற வற்றின் மூலம் ஒன்றிய அரசின் விவசாயத் துறை மாநிலங்களுக்கு உதவி வருகிறது என்றும், கடந்த 2025--26 ஆண்டில் உணவு பொருட்கள் உற்பத்தியின் அளவு 376 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளது என்றும், தோட்டக்கலை பொருட்களின் உற்பத்தி 378 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளது என்றும் இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும் கிஷான் கடன் அட்டைகள் திட்டம் மூலமாக 28 இலட்சம் கோடிகள் அளவிற்கு கடன் உதவி அளிக்கப்பட்டுள்ளது என்றும், பயிர் பாதுகாப்பீடு திட்டம் இராம் என்றழைக்கப்படும் தேசிய விவசாயத்திற்கான திட்டம், ராஷ்டிரிய கிரிஷி விகால்ப திட்டம், எண்ணெய் வித்துக்களுக்கான திட்டம், மண் வளத்தை பாதுகாக்கும் திட்டம் ஆகிய திட்டங்களை கிரிஷி விக்யான் கேந்திராக்களின் மூலம் மாநிலங்களில் ஒன்றிய அரசு செயல்படுத்தி வருகிறது என்றும், வானிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் 651 மாவட்டங்களுக்கான செயல் திட்டம் இந்திய விவசாய ஆராய்ச்சி குழுமத்தால் செயல்படுத்தப்படுகிறது என்றும் இதற்கான நிதியுதவி இதுவரை 151 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் 2900 அதிகமான புதிய பயிர் வகைகளை ஒன்றிய அரசு அளித்துள்ளது என்று ஒன்றிய அரசின் விவசாயத் துறை இணையமைச்சர் ராம்நாத் தாகூர் அவர்கள் மாநிலங்களவையில் தி.மு.க. மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் முன்னிலை!

# தோழர் ஆர்.நல்லகண்ணு சிலை!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

### சென்னை வடக்கு மாவட்ட கழகத்தினர் பெருந்திரளாகப் பங்கேற்பீர்!

### மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் வேண்டுகோள்!

சென்னை, ஜூலை 28-

சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் தொகுதியில் உதவும் கைகள் அறக்கட்டளை மற்றும் திணை நிலவாசிகள் சார்பில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் ஆர். நல்லகண்ணு அவர்களின் மார்பளவு சிலை திறப்பு மற்றும் 'அம்மாச்சி - கற்பனையின் முதல் ஆச்சி' நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சி 29-07-2026 புதன் கிழமை காலை 11.00 மணிக்கு உதவும் கைகள் அறக்கட்டளை வீராகுட்டி தெரு பழைய வண்ணாரப்பேட்டை சென்னை-21 என்ற முகவரியில் நடைபெற உள்ளது.



இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் முன்னிலையில் நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சியில் கழக இளைஞர் அணி செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் இளந்தலைவர் அவர்கள் கலந்து கொண்டு கம்யூனிஸ்டு கட்சி மூத்த தலைவர் தோழர் இரா.நல்லகண்ணு அவர்களின் மார்பளவு சிலையைத் திறந்து வைத்து அம்மாச்சி-கற்பனையின் முதல் ஆசிரியர் நூலை வெளியிடுகிறார். நூலினை பெற்று கொள்பவர்கள்-சுகுணா திவாகர் பாலைவன லாந்தர் காயத்ரி சுப்புலட்சுமி நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபிநேசர் பகுதி செயலாளர்கள் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் இரா.லட்சுமணன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், வட்டச் செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட- பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஆர்.டி.சேகர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 'நீட்' விவகாரத்தில் ஒன்றிய அரசு வழக்கமான சர்வாதிகாரத்தை கையில் எடுத்தால்

# காலில் ஏறிய கரப்பான் பூச்சிகள் நாளை காதைத் துளையிடும்!

### 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் எச்சரிக்கை!

சென்னை, ஜூலை 28 –

'நீட்' விவகாரத்தில் ஒன்றிய அரசு வழக்கமான சர்வாதிகாரத்தை கையில் எடுத்தால் காலில் ஏறிய கரப்பான் பூச்சிகள் நாளை காதை துளையிடும் காலம் வெகு தொலைவில் இல்லை என 'தினகரன்' தலையங்கம் எழுதி ஒன்றிய அரசை எச்சரித்துள்ளது.

அது வருமாறு:

நீட் தேர்வு சர்ச்சைகள் மீண்டும் தேசிய அரசியலின் மையமாக மாறியுள்ளன. நாடு முழுவதும் மாணவர்கள், பெற்றோர் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகள் நீட் தேர்வுக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றனர். சமீபத்தில் டெல்லியில் மாணவர்களின் போராட்டம் விஸ்வரூபம் எடுத்ததோடு, ஒன்றிய அரசையே உலுக்கி விட்டு ஒய்ந்திருக்கிறது. கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் தீவிர முன்னெடுப்புகளும், சமூக ஆர்வலர் சோனம் வாங்க்சுக் உண்ணாவிரதம் உள்ளிட்ட நிகழ்வுகள், இப்போது ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவியை காவு வாங்கி விட்டது.


தினகரன்
ஜூலை 27, 2026 திங்கட்கிழமை
ஒன்றிய அரசுக்கு பின்னடைவு
நீட் தேர்வு சர்ச்சைகள் மீண்டும் தேசிய அரசியலின் மையமாக மாறியுள்ளன. நாடு முழுவதும் மாணவர்கள், பெற்றோர் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகள் நீட் தேர்வுக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றனர். சமீபத்தில் டெல்லியில் மாணவர்களின் போராட்டம் விஸ்வரூபம் எடுத்ததோடு, ஒன்றிய அரசையே உலுக்கி விட்டு ஒய்ந்திருக்கிறது. கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் தீவிர முன்னெடுப்புகளும், சமூக ஆர்வலர் சோனம் வாங்க்சுக் உண்ணாவிரதம் உள்ளிட்ட நிகழ்வுகள், இப்போது ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவியை காவு வாங்கி விட்டது.
வினாத்தாள் கசிவு தொடர்பான குற்றச்சாட்டுகள், தேர்வின் வெளிப்படைத்தன்மை குறித்த

வினாத்தாள் கசிவு தொடர்பான குற்றச்சாட்டுகள், தேர்வின் வெளிப்படைத்தன்மை குறித்த சந்தேகங்கள் மற்றும் மாணவர்களின் எதிர்காலம் பற்றிய அச்சம் ஆகியவை இந்த விவகாரத்தை மேலும் தீவிரப்படுத்தியுள்ளன. இதன் தொடர்ச்சியாக வினாத்தாள் கசிவைத் தடுக்கும் வகையில் புதிய மசோதா நாடாளுமன்றத்தில் இன்று தாக்கல் செய்யப்பட உள்ளது. தேர்வு முறையில் நம்பிக்கையை மீட்டெடுக்க இது ஒரு முயற்சியாக இருக்க கூடும்.

ஆனால் மசோதா தாக்கல் செய்யப்படுவதால் மட்டுமே எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு அடங்கும் என்று கூற முடியாது. நீட் தேர்வை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் அல்லது மாநிலங்களுக்கு தனித்தேர்வு நடத்தும் அதிகாரம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை பல மாநிலங்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. எனவே நாடாளுமன்றத்தில் இன்றும் கடும் அமளி ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

எப்போதுமே எதிர்கட்சிகளை பந்தாட நினைக்கும் ஆளும் பாஜ தரப்பு சமீபகாலமாக, மாணவர்களின் போராட்டம் காரணமாக பின்னடைவை எதிர்கொண்டு வருகிறது. நீட் தேர்வை முற்றிலுமாக ரத்து செய்ய வேண்டும் என தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்கள் தொடர்ந்து குரல் கொடுத்த போதும், அதை காதிலே வாங்காத ஒன்றிய அரசு, இப்போது டெல்லியில் நடந்த போராட்டங்களால் தலைகுனிய வேண்டிய சூழலுக்கு தள்ளப் பட்டுள்ளது.

இதுபோல் கடந்த 2020ம் ஆண்டு 3 வேளாண் சட்டங்களுக்கு எதிராக விவசாயிகள் ஓராண்டுக்கும் மேலாக போராட்டம் நடத்தினர். இறுதியில் வேறு வழியின்றி ஒன்றிய அரசு அந்த சட்டங்களை வாபஸ் பெற்றது. அது மக்கள் போராட்டத்தின் வெற்றியாகவும், ஒன்றிய அரசின் தோல்வியாகவும் கருதப்பட்டது. அதேபோல் தற்போது நீட் தேர்வு விவகாரத்திலும் ஒன்றிய அரசின் முகத்தில் கரி பூசப்பட்டுள்ளது.

'நீட்' தேர்வு விவகாரத்தில் சமீபகாலமாக ஒன்றிய அரசு தீவிர அழுத்தத்தை எதிர்கொண்டு வருகிறது. இப்பிரச்சினையை தீர்க்க முடியாமல் போராட்ட களத்தில் அந்நிய சக்திகள் ஊடுருவியதாக திசை திருப்பவும் திட்டமிட்டது. இருப்பினும் தொடர்ச்சியான போராட்டங்களால் தேர்வு முறையில் மாற்றங்கள், அமைச்சர் ராஜினாமா, சட்ட திருத்தங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை நோக்கி ஒன்றிய அரசு நகர தொடங்கியுள்ளது.

இன்று நாடாளுமன்றத்தில் மசோதா தாக்கல் செய்யப்படும் போது, எதிர்க்கட்சிகள் நீட் தொடர்பாக விரிவான விவாதம் கோரக்கூடும். அதற்கு அரசு இணங்காவிட்டால் அவைகளின் நடவடிக்கைகள் மீண்டும் முடங்கும் சூழலும் உருவாகலாம். நீட் விவகாரம் இனி ஒரு தேர்வு தொடர்பான நிர்வாக பிரச்சினையாக மட்டுமில்லாமல், கல்விக் கொள்கை, கூட்டாட்சி உரிமை, சமூக நீதி மற்றும் அரசியல் பொறுப்புணர்வு ஆகிய அனைத்தையும் தொடும் தேசிய விவகாரமாகவும் உருவெடுக்க வாய்ப்புள்ளது.

ஒன்றிய அரசு தனது வழக்கமான சர்வாதி காரத்தை மீண்டும் கையிலெ டுத்தால், இன்று காலில் ஏறிய கரப்பான் பூச்சிகள், நாளை காதை தொடும் காலம் வெகு தொலைவில் இல்லை.

இவ்வாறு 'தினகரன்' எச்சரித்துள்ளது.

## எது கோமாளித்தனம் மிஸ்டர் நிர்மல் குமார்!

# தரக்குறைவான பேச்சால் பதவியின் கண்ணியத்தை குறைத்துக் கொள்வதா?

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினிடம் அமைச்சர் நிர்மல்குமார் மன்னிப்பு கேட்க வேண்டும்!

அமைச்சர் நிர்மல் குமார் அவர்களே,

முடிந்து போன கல்யாணத்துக்கு மேளம் அடித்து விட்டு நீங்கள் ஊர் முழுவதும் சீன் போட்டு இருக்கிறீர்கள். அது கோமாளித்தனமா, இல்லை ஜென்சி தி.மு.க. என்று டி ஷர்ட் போட்டு வந்து உட்கார்ந்தது கோமாளித்தனமா?





மின்சாரத் துறை அமைச்சர் கோமாளித்தனத்தை நிறுத்திக் கொள்ளச் சொல்லி உள்ளார். நீங்களும் சரி, பள்ளி கல்வித்துறை அமைச்சரும் சரி, ரெண்டு பேரும் மாற்றி மாற்றி முடிஞ்சு போன கல்யாணத்துக்கு மேளம் அடித்தீர்கள் அல்லவா? அந்த மாதிரி இங்கே யாரும் மேளம் அடிக்கவில்லை.

'ஜென்சி' போராட்டம் டெல்லியில் ஆரம்பிச்சப்போது முதன் முதலில் தமிழ்நாட்டில் இருந்து தி.மு.க. சார்பில் ஆ.ராசா எம்.பி. சென்று ஆதரவு அளித்தார்கள். அதற்கு அடுத்து கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆதரவு அளித்தார்கள்.

நீங்கள் என்ன செய்தீர்கள்? ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் ராஜினாமா செய்த பிறகு சாவகாசமாக மத்தியானமா வந்து மாணவர்களுக்கு ஆதரவு கொடுத்தீர்கள். இப்போது தெரியுதா எது கோமாளித்தனம் என்று. முடிந்து போன கல்யாணத்திற்கு மேளம் அடிப்பதுதான் கோமாளித்தனம். டிஷர்ட் போட்டு வருவது கோமாளித்தனம் அல்ல.

நீங்கள், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை "கோமாளி" என்று விமர்சித்திருப்பது அரசியல் நாகரிகத்தின் வீழ்ச்சியையே வெளிப்படுத்துகிறது.

அமைச்சரின் நாவுக்கு கட்டுப்பாடு இல்லையென்றால், அது அரசின் பொறுப்புணர்வுக்கு கேள்விக்குறியாகவே அமையும்.

மக்கள் அன்றாடம் சந்திக்கும் பாலியல் சீண்டல், கற்பழிப்பு, கொலை, கொள்ளை, லாக்கப் டெத், ஆள் கடத்தல், நில அபகரிப்பு, பணம் கேட்டு மிரட்டுதல், ஊழல், அரசு நிலங்களில் காலங்காலமாக குடியிருந்து வரும் ஏழை எளிய மக்களின் வீடுகளை இடித்தல், சட்டம் ஒழுங்கு சீர்கேடு போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாத அமைச்சர், தரக்குறைவான வார்த்தைகளால் அரசியல் கவனம் ஈர்க்க முயல்வது அவரது செயல்பாடுகளில் உள்ள வெற்றிடத்தையே காட்டுகிறது.

கொள்கைக்கு கொள்கையால் பதிலளிக்க முடியாதவர்கள் மட்டுமே இழிவான வார்த்தைகளை ஆயுதமாக பயன்படுத்துவார்கள்.

ஒரு அமைச்சரின் வார்த்தைகள் அரசின் தரத்தை பிரதிபலிக்க வேண்டும். ஆனால் நிர்மல் குமார் அவர்களின் இந்தப் பேச்சு, அவரது பதவியின் கண்ணியத்தைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல், அரசியல் கலாச்சாரத்தையும் அவமதிக்கும் செயலாகும்.

தமிழக மக்கள் நாகரிகமான அரசியலையே விரும்புகிறார்கள்; தரம் தாழ்ந்த வசை பாடுகளையும் ஆணவப் பேச்சுகளையும் அல்ல. அரசியல் என்பது மேடைப் பேச்சுப் போட்டி அல்ல; அது மக்களின் நம்பிக்கையை சுமக்கும் பொறுப்பு என்பதை அமைச்சர் உணர வேண்டும்.

அமைச்சர் நிர்மல் குமார் தனது தரக்குறைவான பேச்சுக்கு உடனடியாக பொதுமக்களிடமும், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடமும் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும். தொடர்ந்து இது போன்ற நாகரிகமற்ற அரசியலை முன்னெடுத்தால், தி.மு.க. தொண்டனும், ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்ட தமிழக மக்களும் தக்க நேரத்தில் ஜனநாயக வழியில் அதற்கான பதிலை அளிப்பார்கள்.



**கே. அசோகன்**
கழகத் தொண்டன்,
வழக்கறிஞர்,
திண்டிவனம்,
விழுப்புரம் மாவட்டம்

## கோவை – மதுரை மெட்ரோ திட்டத்தை ரத்து செய்த ஒன்றிய பா.ஜ.க. அரசை தட்டிக் கேட்காத

# முதலமைச்சரின் முகத்தைப் பார்த்தாலே "அடிமையின் உடம்பில் ரத்தம் எதற்கு" என்ற பாடல்தான் ஞாபகம் வருகிறது!

### தி.மு.க. ஐ.டி. விங் கண்டனம்!

சென்னை, ஜூலை 28-

கோவை - மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தை ரத்து செய்த ஒன்றிய பா.ஜ.க. அரசைத் தட்டிக் கேட்காத முதலமைச்சரின் முகத்தைப் பார்த்தாலே 'அடிமையின் உடம்பில் ரத்தம் எதற்கு' என்ற பாடல் வரிகள் தான் ஞாபகத்துக்கு வருகிறது என்று தி.மு.க. ஐ.டி.விங் தெரிவித்துள்ளது.

இது குறித்து தி.மு.க. ஐ.டி. விங் வெளியிட்ட செய்திக்குறிப்பு வருமாறு:-

சமூக ஊடகங்களில் virtual abusers'ஐ போன்று பெயரவில் பா.ஜ.க. எங்கள் 'கொள்கை எதிரி' என சீன் போட்டுக் கொண்டாலும், உண்மையில் "பா" என பா.ஜ.க.வின் முதல் எழுத்தை சொல்லவே அஞ்சி நடுங்கும் அடிமையாக திகழ்கிறது த.வெ.க.

தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் வகையில் கோவை, மதுரை நகரங்களுக்கான மெட்ரோ ரயில் திட்டத்தை ஒன்றிய அரசு நிராகரித்த நிலையில் இதுவரை மௌன சாமியார் போலவே இருக்கிறார் முதலமைச்சர் விஜய்.

இதைக்கூட பேச பயப்படும் அடிமைக்கு எதற்கு முதலமைச்சர் பதவி என கேட்கத் தோன்றுகிறது!

முதலமைச்சரின் முகத்தைப் பார்த்தாலே "அடிமையின் உடம்பில் ரத்தம் எதற்கு?" என்ற பாடல் வரிகளும் நியாபகம் வருவதை தடுக்க முடியவில்லை!

இவ்வாறு தி.மு.க. ஐ.டி. விங் தெரிவித்துள்ளது.



சென்னை வடக்கு மாவட்டம் மாவட்ட மகளிர் அணி தலைவர் மாமன்ற உறுப்பினர் பா.வேளாங்கன்னி தனியார் சுவற்றில் அனுமதி பெறப்பட்டு முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் விழா பேனர் வைக்கப்பட்டது. அதனை சென்னை மாநகராட்சி அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் புகார் அளித்ததின் பேரில் தி.மு.க. பேனர் அகற்றப்பட்டது. அதனை எதிர்த்து மாணவர் அணி பகுதி துணை அமைப்பாளர் பா.சக்திதாசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.